## திருப்பத்தூர் நகராட்சி

## ஜுன் –2021– ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 10.06.2021 | 106) திருப்பத்தூர் நகராட்சியின் 2019–2020–ம் ஆண்டிற்கு தணிக்கை செய்யப்பட்டது. தணிக்கை பணியாளர்களின் ஊதியம் மற்றும் பிறபடிகளின் மொத்தம் ரூ.2,94,271/– ஆகும் இதில் 50 சதவீதம் ரூ.1,47,136/– ஆகும்.<br>எனவே 2019–2020 ஆம் ஆண்டுக்கான தணிக்கை கட்டணத் தொகை ரூ.1,47,136/–ஐ அரசு தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.896/2017/பி3 | அனுமதிக்கலாம். |

## திருப்பத்தூர் நகராட்சி

## ஜுன் –2021– ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 10.06.2021 | 107) திருப்பத்தூர் நகரட்சிக்குட்பட்ட பகுதியில் சர்வே எண்.686/1A/1, 1A2, 1A3, 1A4, 1A5, 1A6, 1A7, 1A8, 1A9, 686/1B, 1C, 1D நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருப்பத்தூர் அவர்களின் 05.05.2021–ம் தேதிய கடிதம் ந.க.எண்.282/2021/திமா2, நாள்.05.05.2021 ல் மேற்படி மனைப்பிரிவில் அமையவுள்ள சாலைகளுக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு பெறப்பட்ட மனைப்பிரிவு வரைப்படம் மற்றும் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br>மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளை திருப்பத்தூர் நகராட்சி ஆணையாளர் பெயரில் தானப்பத்திரபதிவு எண்5487/2021, நாள்.07.06.2021 ல் பதிவு செய்து அசல் பத்திரம் நகரமைப்பு பிரிவில் பெறப்பட்டதால் உரிய மனைப்பிரிவு அனுமதி வழங்க நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பத்தூர் அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.0465/2021/எப்1 | அனுமதிக்கலாம். |

## திருப்பத்தூர் நகராட்சி

## ஜுன்–2021–ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 10.06.2021 | 108) திருப்பத்தூர் நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதி தொகைக்கு 1999–2000 முதல் 2016–2017 வரையிலான காலத்திற்கு சேமநல நிதி தொகைக்கு ஒவ்வொரு பணியாளருக்கும் ஒவ்வொரு வருடமாக கணக்கீடு செய்து சம்மந்தப்பட்ட பணியாளர்கள் கணக்கில் மேற்படி காலத்திற்கான வட்டி தொகையினை வரவு வைக்க வேண்டியுள்ளதால், மேற்படி பணியினை தனியார் மூலம் செய்து முடிக்க அதற்க்கான தோராய செலவு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அ.கு. : அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.561/2021/அ5 | அனுமதிக்கலாம். |

**திருப்பத்தூர் நகராட்சி**

**ஜுன் –2021– ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்**

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 10.06.2021 | 109) திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் மேற்கோள்ளப்பட்டு வருகிறது. தற்போது பருவமழை காலம் துவங்கியுள்ளதால் நன்னீர் தேங்கும் அபாயமுள்ளது. இந்நகராட்சி துய்மை பணியாளர்கள் மூலம் திடக்கழிவுப் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு சுகாதார சீர் கேடுகள் ஏற்படாமல் பொதுமக்களுக்கு நோய் தொற்று பரவாத வண்ணம் கிருமி நாசினி தெளித்து நகரை தூய்மையாக பராமரித்து பேணிகாக்கும் பொருட்டு, பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி கீழ்காணும் விவரப்படி, நல்ல தரமான பிளீச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்பு தூள் ஆகியவை விலைப்புள்ளி கோரி வாங்கி பயன்படுத்தவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.25 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**வ.எண்** \| **பொருள்** \| **அளவு**<br>1 \| பிளீச்சிங் பவுடர் \| 5000 கிலோ (5.00 டன்)<br>2 \| சுண்ணாம்பு தூள் \| 20000 கிலோ (20 டன்)<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மேற்படி பொது சுகாதார பணிகளின் அவசியம் கருதி, நல்ல தரமான பிளீச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்பு தூள் ஆகியவை வாங்கிடவும், அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.298/2020/எச்1) | அனுமதிக்கலாம். |

## திருப்பத்தூர் நகராட்சி

## ஜூன் –2021– ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 10.06.2021 | 110) திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் தினசரி கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள் நிரந்தர மற்றும் தனியார் தூய்மை பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொரோனா வைரஸ் (COVID-19) நோய் தடுப்பு பணிகளில், நோய் தொற்றுள்ள பகுதிகள், அரசு மருத்துவமனைகள், பொது கழிப்பறைகள், பள்ளிகள், வணிக வளாகங்கள், பொது மக்கள் நடமாடும் பகுதிகள், பேருந்து நிலையம், மெயின்ரோடு போன்ற முக்கிய பகுதிகளில் கழிவுகள் சேகரமாகும் பகுதிகளிலும், பொது சுகாதாரம் பேணிகாக்கும் பொருட்டு 200 லெமன் கிராஸ் ஆயில் வாங்கி பயன்படுத்தவும், அதற்கான தோராய செலவினம் ரூ.4.80.இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>பொது சுகாதார பணியின் அவசியத்தை கருதி லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்து பயன்படுத்தவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.298/2020/எச்1) | அனுமதிக்கலாம். |

திருப்பத்தூர் நகராட்சி

ஜுன் –2021– ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 10.06.2021 | 111) திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் மற்றும் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபாகரணங்கள் கீழ்காணும் விவரப்படி வாங்கி பயன்படுத்தவும் விலைப்புள்ளி கோரி வாங்கிடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.4.80 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கலாம். |

| வ.எண் | சப்ளை செய்யும் பொருட்கள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 3 PLY Mask | 10,000 |
| 3. | Cotton Mask Cotton | 2000 |
| 4. | Hand Glovse | 1800 |
| 5. | Reflect Jacket | 600 Pcs |

அலுவலக குறிப்பு:-

பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதியும், பணியாளர்களின் நலன் கருதியும் மேற்படி பொருட்களை வாங்கி பயன்படுத்தவும், அதற்காகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதி அல்லது SDRF நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.298/2020/எச்1)

**திருப்பத்தூர் நகராட்சி**

**ஜுன் –2021– ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்**

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 10.06.2021 | 112) திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் தினசரி திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண்.TN83 P 2687 JCB வாகனம் பழுதடைந்து நிறுத்தப்பட்டுள்ளது. பருவமழை தொடங்க உள்ளதை கருத்தில் கொண்டு, மேற்படி வாகனத்தை விலைப்புள்ளி கோரி உடன் பழுது நீக்கி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும்பேட்டரி உள்ளிட்ட பொருட்களை மாற்றவும் ,பில்டர்கள் ,பம்புகள் , அதற்கான தோராய செலவினம் ரூ.75,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>பொது சுகாதார பணிகளின் அவசியத்தினை கருதி மேற்படி வாகனத்தை பழுது பார்க்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.617/2021/எச்1) | அனுமதிக்கலாம். |

**திருப்பத்தூர் நகராட்சி**

**ஜுன் –2021– ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்**

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 10.06.2021 | 113) திருப்பத்தூர் நகராட்சியில் இந்நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து பணியிடையில் 01.04.2011-ல் காலமான திரு.எஸ்.வெங்கடேசன் த/பெ சாமிநாதன் என்பவரின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்க கோரி, அன்னாரின் மனைவி திருமதி.சாந்தி க/பெ வெங்கடேசன் என்பவர் இந்நகராட்சிக்கு எதிராக தொடுத்துள்ள சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.538/2018-ன் வழக்கிற்கு திரு.V.ஜெயபிரகாஷ் நாராயணன், அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்கள் இந்நகராட்சி சார்பாக ஆஜராகவும், எதிர்வாதுரை தயார் செய்யவும், வழக்கு கட்டணமாக தொகை ரூ.15000/-ஐ வழங்க கோரியுள்ளார். எனவே, மேற்படி கட்டணத்தை வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:-**<br>மேற்படி வழக்கிற்கு வழக்கு கட்டண தொகை ரூ.15000/-ஐ திரு.V.ஜெயபிரகாஷ் நாராயணன், அரசு சிறப்பு வழக்கறிஞர் சென் னை அவர்களுக்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.1055/2015/எச்1) | அனுமதிக்கலாம். |

## திருப்பத்தூர் நகராட்சி

## ஜுன் –2021– ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 10.06.2021 | 114) திருப்பத்தூர் நகராட்சி தென்பெண்ணை தலைமை நீரேற்று நிலையம் சுமார் 42 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இந்நீரேற்று நிலையம் 2006–ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு அதன் பின்னர் நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்பொழுது இத்திட்டத்திற்கான தலைமை நீரேற்று நிலையத்தினை பராமரிக்கவும் இயக்குவதற்கும் ஆட்கள் யாரும் நியமிக்கப்படவில்லை. பணி செய்ய போதுமான குடிநீர் பணியாளர்களும் இல்லை. மேலும் நகராட்சியின் மற்றொரு தலைமை நீரேற்று நிலையமான அம்பலூர் தலைமை நீரேற்று நிலையம் சுமார் 26கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. தற்பொழுது இந்நீரேற்று நிலையத்தில் போதுமான தண்ணீர் இல்லாத காரணத்தால் இந்நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் பம்பிங் செய்யப்படவில்லை. இந்நீரேற்று நிலையத்திற்கும் போதுமான ஆட்கள் பராமரிக்கவும் இயக்குவதற்கும் இல்லை.<br>நகரப்பகுதியில் உள்ள இரண்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளான, பாலம்மாள் காலனி மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் L&T மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைந்துள்ள இடத்தில் குடிநீர் விநியோகத்திற்கு போதுமான ஆட்கள் இல்லை. பாலம்மாள் காலனியில் நகராட்சியின் மூலம் அமைக்கப்பட்ட ஆர்.ஓ பிளாண்ட் இயக்குவதற்கு ஆட்கள் இல்லை. மேலும் இந்நகராட்சியில் புதியதாக பணியிடங்கள் உருவாக்க 49 சதவீதத்திற்கு மேல் உள்ளதால் , குடிநீர் பணியின் அவசியம் கருதி இப்பணிகளை தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணியாளர்கள் தேர்வு செய்து பணிகளை 2021–ஆம் ஆண்டு ஜீலை மாதம் முதல் 31.03.2022 வரை மேற்கொள்ள வேண்டி ரூ.15.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்டுள்ளவாறு பட்டியலில் கண்டுள்ளபடி பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| தென்பெண்ணை தலைமை நீரேற்று நிலையம் இயக்குதல் பணி | 7 நபர்கள் |
| ஆம்பலூர் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் சக்கர குப்பம் பூஸ்டர் இடம் இயக்குதல் பணி | 2 நபர்கள் |
| பாலம்மாள் காலனி மேல்நிலை நீர்தேக்க தொட்டி, L&T மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குதல் பணி | 3 நபர்கள் |
| பாலம்மாள் காலனி ஆர்.ஓ.பிளாண்ட் இயக்குதல் பணி | 1 நபர் |
| ஆக மொத்தம் | 13 நபர்கள் |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) குடிநீர் பணியின் அவசியம் கருதி தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் செய்ய ஒப்ப ந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) இப்பணிக்கான செலவீனத் தொகையினை நகராட்சி குடிநீர் நிதி 2021–22–ஆம் நிதியாண்டின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் 521 /2021/இ1 | |

**திருப்பத்தூர் நகராட்சி**

**ஜூன் –2021– ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்**

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 10.06.2021 | 115) இந்நகராட்சியில் தெருவிளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் தனியார் நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. தனியார் ஒப்பந்த காலம் 30.06.2021–வுடன் முடிவடைந்து விட்டது. 2019–2020 –ம் நிதியாண்டு முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி 23.02.2021–ஆம் தேதி பெறப்பட்டு 12.03.2021–ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அப்போது தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் தேர்தல் காலம் என்பதால் ஒப்பந்தப்புள்ளியினை பிரித்து தொடர் நடவடிக்கை எடுக்க இயலவில்லை. எனவே இப்பணிக்கான உத்திரவு வழங்கும் வரை பணியின் அவசியம் கருதி தெருவிளக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை தற்பொழுது பார்க்கும் சஞ்சய் டிரேடர்ஸ், தருமபுரி என்பவருக்கு 01.07.2021 முதல் 30.09.2021 வரை மூன்று மாத காலத்திற்கு ஏற்கனவே உள்ள மதிப்பீட்டின் படி ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) 01.07.2021–ம் தேதி முதல் 30.09.2021 வரை ஏற்கனவே உள்ள மதிப்பீட்டின் அடிப்படையில் பணிகள் செய்யவும் அதற்கான செலவீனத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.1416/2016/2016/இ1 | அனுமதிக்கலாம். |

**திருப்பத்தூர் நகராட்சி**

**ஜூன் –2021– ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்**

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 10.06.2021 | 116) 2020–ம் ஆண்டு வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை பணிக்கு தேவையான தளவாட பொருட்கள் நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் வாங்க அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் தேவையான உபகரணங்கள் திரு. கார்த்திகேயன் ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு ரூ.3,64,884/– பொருட்கள் வாங்கப்பட்டது. பணியின் அவசியம் கருதி நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் பொருட்கள் வாங்கியதற்கும் ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கியதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசியம் கருதி நகராட்சி சட்டப்பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. இப்பணிக்கான செலவீனத் தொகையினை நகராட்சி குடிநீர் நிதி 2020–21–ஆம் நிதியாண்டின் கீழ் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் 0002/2021/இ1 | அனுமதிக்கலாம். |

**திருப்பத்தூர் நகராட்சி**

**ஜுன் –2021– ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்**

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>Serial Number and Subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td>10.06.2021</td><td>117) 2020–ம் ஆண்டு வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை பணிக்கு தேவையான ஆயில் மோட்டார்கள் நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் வாங்க அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் தொகை ரூ.1,51,850/–க்கு திரு. கார்த்திகேயன் ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பொருட்கள் வாங்கப்பட்டது. பணியின் அவசியம் கருதி நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் பொருட்கள் வாங்கியதற்கும் ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கியதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>எண்ணிக்கை</th></tr>
<tr><td>1</td><td>தள்ளு வண்டியுடன் கூடிய 10 எச்.பி டீசல் மோட்டார் (10 HP Diesel Motor with Trolley) சப்ளை செய்தல் பணி</td><td>1 No</td></tr>
<tr><td>2</td><td>தள்ளு வண்டியுடன் கூடிய 15 எச்.பி டீசல் மோட்டார் ( 15 HP Diesel Motor with Trolley) சப்ளை செய்தல் பணி</td><td>1 No</td></tr>
</table>
அலுவலக குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பணியின் அவசியம் கருதி நகராட்சி சட்டப்பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3. இப்பணிக்கான செலவீனத் தொகையினை நகராட்சி பொது நிதி 2020–21–ஆம் நிதியாண்டின் கீழ் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
ந.க.எண் 0002/2021/இ1</td><td>அனுமதிக்கலாம்.</td></tr>
</table>

## திருப்பத்தூர் நகராட்சி

## ஜூன் –2021– ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 10.06.2021 | 118) இந்நகராட்சியில் கொரோனா தடுப்பு பணிகளுக்காக நகர பகுதி மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கிடும் பொருட்டு தென்பெண்ணை தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள இரண்டு எண்ணிக்கை 50 எச்.பி, மின் மோட்டார் பழுதினை குடிநீர் பணியின் அவசியம் கருதி நகராட்சி சட்டப்பிரிவு விதி எண் 15–ன் கீழ் பழுது நீக்கம் செய்து தர அனுமதி வழங்கியதன் அடிப்படையில் Sri Balaji Industries, Vellore அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு அதற்கான தொகை ரூ.2,97,494/– வழங்கப்பட்டது. எனவே பணியின் அவசியம் கருதி நகராட்சி சட்ட பிரிவு விதி எண் 15–ன் கீழ் செய்யப்பட்ட பணிக்கும் தொகை வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசியம் கருதி நகராட்சி சட்டப்பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. இப்பணிக்கான செலவீனத் தொகையினை நகராட்சி குடிநீர் நிதி 2020–21–ஆம் நிதியாண்டின் கீழ் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் 0002/2021/இ1 | அனுமதிக்கலாம். |

**திருப்பத்தூர் நகராட்சி**

**ஜுன் –2021– ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்**

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 10.06.2021 | 119) 2021–ம் ஆண்டு கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளும் வகையில் அரசு மருத்துவமனை மற்றும் விஜயசாந்தி தனியார் பள்ளியில் சிகிச்சை பெற்று வரும் கொரோனா நோயாளிகளுக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்திட வேண்டி இரண்டு 5எச்.பி ஆயில் டீசல் மின் மோட்டார்கள் ரூ.1,23,900/– மதிப்பீட்டில் நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் வாங்க அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் திரு. கே.வி. இளங்கோவன் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் செய்து முடிக்கப்பட்டது. பணியின் அவசியம் கருதி நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் பொருட்கள் வாங்கியதற்கும் ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கியதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசியம் கருதி நகராட்சி சட்டப்பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. இப்பணிக்கான செலவீனத் தொகையினை நகராட்சி குடிநீர் நிதி 2020–21–ஆம் நிதியாண்டின் கீழ் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் 0002/2021/இ1 | அனுமதிக்கலாம். |

**திருப்பத்தூர் நகராட்சி**

**ஜூன்–2021–ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்**

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 10.06.2021 | 120) திருப்பத்தூர் நகராட்சி ஆணையர் குடியிருப்பு கட்டிடம் முழுவதும் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு முழு பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆணையர் குடியிருப்பு கட்டிடத்தினை பயன்படுத்த கட்டிடத்தின் உட்புறம் கப்போர்டுகள், டைல்ஸ், மின் சாதன பொருட்கள், கழிவறை சாதனங்கள் பொருத்தும் பணி செய்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணிக்கான செலவீனத் தொகையினை நகராட்சி பொது நிதி 2021–22–ஆம் நிதியாண்டின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.0002/2021/இ1 | அனுமதிக்கலாம். |

**திருப்பத்தூர் நகராட்சி**

**ஜூன் –2021– ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்**

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 10.06.2021 | 121) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 18 வரை உள்ள குடிநீர் மெயின் பம்பிங் பைப் லைன், வீட்டு பகுதிகளுக்கு செல்லும் பகிர்மான பைப் லைன்களில் ஏற்படும் உடைப்பு, அடைப்பு மற்றும் லிக்கேஜ் ஆகியவற்றினை உடன் சரி செய்து மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கிட குடிநீர் பைப் லைன் பராமரிப்பு பணிகள் செய்திட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.இப்பணிக்கான செலவீனத் தொகையினை நகராட்சி குடிநீர் நிதி 2021–22–ஆம் நிதியாண்டின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் 0002/2021/இ1 | அனுமதிக்கலாம். |

திருப்பத்தூர் நகராட்சி

ஜூன் –2021– ஆம் மாத சாதாரண மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 10.06.2021 | 122) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 19 முதல் 36 வரை உள்ள குடிநீர் மெயின் பம்பிங் பைப் லைன், வீட்டு பகுதிகளுக்கு செல்லும் பகிர்மான பைப் லைன்களில் ஏற்படும் உடைப்பு, அடைப்பு மற்றும் லிக்கேஜ் ஆகியவற்றினை உடன் சரி செய்து மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கிட குடிநீர் பைப் லைன் பராமரிப்பு பணிகள் செய்திட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணிக்கான செலவீனத் தொகையினை நகராட்சி குடிநீர் நிதி 2021–22–ஆம் நிதியாண்டின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் 0002/2021/இ1 | அனுமதிக்கலாம். |